சர்வதேச
கூட்டுறவு ஆண்டு
2025
நல்லுலகை
கட்டமைக்கும் கூட்டுறவு

# கூட்டுறவு

நவம்பர்– 2025

## "கூட்டுறவு கீதம்" வெளியீடு




ரூ. 20/–

C.C. BANK

நம்பகமான பாதுகாப்பு
நிலையான வளர்ச்சி

(Since 1930)

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

215, பிரகாசம் சாலை, (பிராட்வே), சென்னை-600108.

தொலைபேசி எண் : 044-23458708 to 23458713 பேக்ஸ் :044-25381087

Web : www.ccbankchennai.com Email : ccb_bank@yahoo.co.in

சென்னை மாநகரில் 71 கிளைகள்




- மைய வங்கியியல் சேவையுடன் கூடிய கிளைகள்
- ATM மற்றும் SMS வசதி
- RTGS / NEFT பணப் பரிமாற்ற வசதி
- 54 கிளைகள் குளிர்சாதனம் மற்றும் நவீன வசதிகளுடன்
- சுமார் 10,000 வாடிக்கையாளர்களுக்கு நேரடி சமையல் எரிவாயு மானியம்
- ரூ.500 கோடிக்கும் அதிகமான முதலீடு
- வைப்பீடுகளுக்கு கூடுதல் வட்டி
- ஆயுள்/ பொதுக் காப்பீடு சேவைகள்

**அனைத்துத் தரப்பினருக்குமான கடனுதவிகள்**

- வீடு அடமானக் கடன்கள் / வீட்டுவசதி கடன்கள்
- நகைக் கடன்கள் (பல்வேறு வட்டி விகிதங்களில்)
- மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன்கள்
- சிறுவணிகக் கடன்
- சம்பளக் கடன்
- சுய உதவிக் குழுக்களுக்கான கடன்

(IFS Code: TNSC0010500)

# கூட்டுறவு

மலர் : 98 | நவம்பர்: 2025 | இதழ் : 8

கூட்டுறவு இயக்கக் கொள்கை விளக்க
இதழ் எல்லார்க்கும் எல்லாமே என்றே ஞாலம்
இலங்கிடவே கூட்டுறவு ஏற்ற பாதை
இல்லாமை இல்லாத வாழ்வு வேண்டின்
ஏற்றிடுவோம் கூட்டுறவு வெற்றிப் பாதை!

ஆசிரியர் :

முனைவர். க.சொ. இரவிச்சந்திரன்,
M.Sc.,(Agri), M.A.,B.L., H.D.C.M., Ph.D.,,

தொலைபேசி : 044–2836 4864

மின்னஞ்சல் : tncupub03@gmail.com

இணையதளம் : www.tncu.tn.gov.in

ஆயுள் சந்தா ரூ. 2000/–
(பத்தாண்டுகளுக்கு)

ஆண்டு சந்தா ரூ.210/–

தனிப்பிரதி விலை ரூ.20/–

## விளம்பரக் கட்டணம்

(GST 5% உட்பட)

பல வண்ணம் (ஓராண்டிற்கு)
அட்டை 4 ஆம் பக்கம் ரூ.50,000/–
அட்டை 2 & 3 ஆம் பக்கம் ரூ.40,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(ஓராண்டிற்கு)
முழுப்பக்கம் ரூ.24,000/–
அரைப்பக்கம் ரூ.12,000/–

உள்ளே கருப்பு – வெள்ளை
(6 மாதங்களுக்கு)
முழுப்பக்கம் ரூ.12,000/–
அரைப்பக்கம் ரூ. 6,000/–

## இந்த இதழில்....

ஆசிரியர் உரை! ஆளுமை திறனை வளர்ப்பதில் கூட்டுறவின் பங்கு! — 5

“"கூட்டுறவு கீதம்" வெளியீடு மற்றும் கூட்டுறவுத் துறையின் முக்கிய முன்னெடுப்புகள்!” — 8

72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா — 14

அசோலா வளர்ப்பு! — 26

இன்று ஒரு தகவல்: மாறுவது மனம்! — 36

நம்ம ஊர்..நம்ம கூட்டுறவு: சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதுணை! — 39



ஜனநாயகம் என்பது நிலையான கருத்து அல்ல. அது தொடர்ந்து புதுப்பிக்கப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும். நாம் அனைவரும் இணைந்துதான் உண்மையான பிரதிநிதித்துவத்தையும் மக்களின் தேவைகளுக்கேற்ப அது மாற்றப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

-பண்டித ஜவஹர்லால் நேரு

---




## அட்டைப்படம்

**மாண்புமிகு அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், முதல்முறையாகக் கூட்டுறவு இயக்கத்திற்கென்றே பிரத்யேகமாக இயற்றப்பட்ட "கூட்டுறவு கீதத்தை" அதிகாரபூர்வமாக வெளியிட்டார்**

**இந்நிகழ்வில், இசையமைத்த இசையமைப்பாளர் திரு. ஸ்ரீகாந்த் தேவா, அரசு முதன்மைச் செயலாளர் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ. இரவிச்சந்திரன் இணைப்பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) திரு. வெ. முரளிக்கண்ணன் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.**



ஆசிரியர் உரை

# ஆளுமை திறனை வளர்ப்பதில் கூட்டுறவின் பங்கு

கூட்டுறவு என்பது பலதரப்பட்ட மக்கள் பொதுவான பொருளாதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக தானாக முன்வந்து ஒன்றிணைந்து, ஜனநாயகரீதியாக நிர்வாகம் செய்யப்படும் ஒரு அமைப்பாகும். இந்த அமைப்பு தனிநபர் ஆளுமை திறனை (Personality Development) வளர்ப்பதில் மிக முக்கியப் பங்காற்றுகிறது.

கூட்டுறவு அமைப்பில் உறுப்பினராக இருப்பதன் மூலமும், அதன் செயல்பாடுகளில் பங்கேற்பதன் மூலமும் ஒருவரின் ஆளுமைத் திறன் பன்முகத்தன்மை பெறுகிறது.

கூட்டுறவுக் களத்தில், உறுப்பினர்கள் மற்றும் பங்குதாரர்கள் பலதரப்பட்ட சமூகப் பின்னணியில் இருந்து வருவதால், அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இது மற்றவர்களின் கருத்துக்களுக்குச் செவி சாய்ப்பது, அவர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வது போன்ற பண்புகளை வளர்க்கிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் போன்ற அமைப்புகளில் தலைவராகப் பொறுப்பு வகிப்பவர், பலதரப்பட்ட மக்களின் பிரச்சனைகளை அணுகும்போது, மக்களின் துயரங்களுக்கு ஆறுதல் அளிக்கும் ஈகை, கருணை மற்றும் பொதுநலம் போன்ற நற்குணங்கள் இயல்பாகவே வெளிப்படுகின்றன. வறுமையில் இருக்கும் ஒருவருக்குக் கடன் வழங்குவதில் காட்டும் அக்கறை, வெறும் நிர்வாகத் திறனைக் கடந்து மனிதநேயத்தை வெளிப்படுத்துகிறது.

மனிதநேயத்தை வலியுறுத்தும் கருத்துகளும் கூட்டுறவுப் பணியில் பிரதிபலிக்கின்றன.

"காட்டிய உலகெலாம் கருணையால்
சித்தியின் ஆட்டியல் புரியும் அருட்பெருஞ் ஜோதி"
"எங்கே கருணை இயற்கையின் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் சிவமே
ஆரே என்னினும் இரங்குகின் றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே"

இத்திருவருட்பா வரிகள், கருணையே மிக உயர்ந்த குணம் என்பதை உணர்த்துவதுடன், கூட்டுறவின் செயல்பாடுகளுக்கும் அடித்தளமாக அமைகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள் சிறந்த தலைமைப் பண்புகளை உருவாக்குவதற்கான ஒரு தளமாகச் செயல்படுகின்றன. இங்கு எடுக்கும் முடிவுகள், நிர்வாகத்தில் காட்டும் வெளிப்படைத்தன்மை மற்றும் மக்கள் நலனில் காட்டும் அக்கறை ஆகியவை ஒருவரை சிறந்த தலைவராக வடிவமைக்கின்றன.

கூட்டுறவு அமைப்புகளின் தலைவர்கள், சாதி, மத வேறுபாடுகளுக்குத் தீர்வாக சமூகநீதியைகடைப்பிடிப்பவர்களாகவும்,சமூகநல்லிணக்கத்தைப்பேணுபவர்களாகவும் திகழ வேண்டும். அனைவரையும் சமமாகக் கருதி செயல்படுவது, கூட்டுறவு நிறுவனங்களின் தலைவரின் தலையாயப் பண்பாகும். கூட்டுறவுச் சங்கங்கள் சனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளைப் பிரதிபலிப்பவை. இங்கு ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு உண்டு. இந்த ஜனநாயக நடைமுறைகள், ஒரு நாட்டின் சிறந்த ஜனநாயக அடித்தளத்திற்கு அத்தியாவசியமான திறமைகளை வளர்க்கின்றன. தேசத்தந்தை காந்தியடிகள், கூட்டுறவு அமைப்பின் மீதான தனது பார்வையை லியோ டால்ஸ்டாய், ஜான் ரஸ்கின் பாண்ட் போன்றவர்களின் நூல்களைப் படித்ததன் மூலம் பெற்ற தாக்கம்தான், கூட்டுறவு மனப்பான்மையுடன் கூடிய சிறந்த சனநாயகத்தை உருவாக்க அடித்தளமிட்டது.

கூட்டுறவு சங்கத்தின் பணி, ஒரு தனிநபரை நாட்டின் உயரிய தலைமைப் பொறுப்புக்குத் தகுதியுள்ளவராக்குகிறது என்பதற்குப் பல எடுத்துக்காட்டுகள் உள்ளன.

சரத் பவார் (Sharad Pawar): இவர் இந்திய ஒன்றிய அரசின் நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சராகப் பணியாற்றியவர். இத்துறையில் பல்வேறுப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்த அனுபவம் இவருக்குக் கிடைத்தது. இந்த விரிவான மக்கள் தொடர்பு மற்றும் கள அனுபவம் இவருக்குச் சிறந்த அரசியல் அடித்தளத்தை வழங்கியது. இதன் காரணமாகவே, இவரின் இப்பண்பே மகாராஷ்டிரா மாநிலத்தின் முதலமைச்சராக மக்கள் தேர்ந்தெடுத்தனர். மகராஷ்டிரா மாநில கரும்பு ஆலை கூட்டமைப்பின் தன்னிகரற்ற தலைவராக அவர் விளங்கினார்.

தமிழ்நாட்டிலும் கூட்டுறவுத் துறையில் சிறந்து விளங்கி, சமூகத்திற்கு வழிகாட்டிய தலைவர்கள் பலர் உள்ளனர்.

மறைந்த திரு.கோ.சி.மணி அவர்கள், கூட்டுறவு இயக்கத்திற்குச் சிறப்பான பங்களிப்பை அளித்ததன் மூலம் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவராக இருந்து வங்கி மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் தனிநபர் தவணை தவறாது வசூல் செய்து சாதனை செய்து இந்திய அளவில் கௌரவிக்கப்பட்டார். அரவது இப்பணியே பின்னாளில் தமிழக கூட்டுறவுத்துறை அமைச்சராகி பணியாற்ற வாய்ப்பு கிடைத்தது.

# கூட்டுறவின் முன்னோடிகள்



திரு.கோ.சி.மணி



திரு.டி.ஏ. இராமலிங்கம்



திரு.என்.ஆர்.சாமியப்பா



திரு.நாச்சியப்பா

**தஞ்சாவூர் சாமியப்பா, சேலம் நாச்சியப்பா, கோவை இராமலிங்கம், சென்னை நடேசன் போன்றோரின் அளப்பரிய பண்பினை நினைவு கூறும் வகையில், அவர்களின் பெயர்களில் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்கள் அமையப் பெற்றுள்ளன. இந்தக் கல்வி நிறுவனங்கள், அவர்களின் தொலைநோக்கு மற்றும் தலைமைப் பண்பு ஆகியவற்றை வருங்காலத் தலைமுறையினருக்கு எடுத்துரைக்கின்றன.**

**ஆளுமைத் திறன் என்பது தனிப்பட்ட அறிவாற்றல் மற்றும் சமூகப் பண்புகளின் கலவையாகும். கூட்டுறவு இயக்கம் ஒருவரை வெறும் நிர்வாகியாக மட்டுமல்லாமல், கருணை, ஈகை, சமூக நீதி மற்றும் ஜனநாயகப் பண்புகளைக் கொண்ட ஒரு சிறந்த தலைவராகவும், மனிதநேயமிக்கவராகவும் ஆக்குகிறது. கூட்டுறவு அமைப்புகள் சிறந்த குடிமக்களையும், தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைவர்களையும் உருவாக்குவதில் அசைக்க முடியாத பங்கைக் கொண்டுள்ளன.❑**

# தமிழகக் கூட்டுறவில் புதிய சகாப்தம்: "கூட்டுறவு கீதம்" வெளியீடு மற்றும் கூட்டுறவுத் துறையின் முக்கிய முன்னெடுப்புகள்!

**மாண்புமிகு அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் கோலாகல விழா**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி, கூட்டுறவுத் துறையின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்வாக, "கூட்டுறவு கீதம்" வெளியீட்டு விழா கடந்த 06.11.2025 அன்று தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தில் நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், பல்வேறு முக்கியத் திட்டங்களும் தொடங்கப்பட்டன.

## கூட்டுறவின் பெருமையை முழங்கும் கீதம்

விழாவின் மையமாக, மாண்புமிகு அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள், முதல்முறையாகக் கூட்டுறவு இயக்கத்திற்கென்றே பிரத்யேகமாக இயற்றப்பட்ட "கூட்டுறவு கீதத்தை" அதிகாரபூர்வமாக வெளியிட்டார்.

அமைச்சர் அவர்கள் பேசுகையில், "தேசிய கீதம் எவ்வாறு நாட்டின் பெருமைகளை விளக்குகிறதோ, அதேபோன்று இந்தக் கூட்டுறவுக் கீதம், கூட்டுறவின் மாண்புகளையும், உன்னதச் செயல்பாடுகளையும் இனி எடுத்துரைக்கும். இனிவரும் காலங்களில் கூட்டுறவுத் துறையின் அனைத்து நிகழ்வுகளிலும் இந்தக் கீதம் பயன்படுத்தப்படும். இது கூட்டுறவுத் துறையின் ஓர் அங்கமாக என்றும் நிலைத்து நிற்கும்," என்று பெருமிதத்துடன் தெரிவித்தார்.

கூட்டுறவுக் கீதத்துடன் சேர்த்து, கூட்டுறவுப் பாடல்களின் தொகுப்புகளையும் (Album Songs) அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள்.




## தாயுமானவர் திட்டம் முதல் பணியமர்த்தல் வரை

கூட்டுறவுக் கீத வெளியீட்டோடு மட்டுமின்றி, இந்த நிகழ்வில் கூட்டுறவுத் துறையின் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன:

- "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" நூல் வெளியீடு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உயரிய நோக்கமான "முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம்" குறித்த விழிப்புணர்வு நூலை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.
- LED விளம்பரப் பலகை திறப்பு: கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அலுவலகத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள அதிநவீன LED விளம்பரப் பலகையினைத் திறந்து வைத்தார்.
- உறுப்பினர் கல்வித் திட்டச் சாதனங்கள்: கூட்டுறவு ஒன்றியங்கள் மூலமாக நடைபெறும் விழிப்புணர்வு முகாம்கள், இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் மற்றும் கூட்டுறவுச் சேவைகளை மக்களிடம் கொண்டு செல்ல, அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கும் ரூ.29,76,108/– மதிப்பிலான உறுப்பினர் கல்வித் திட்டச் சாதனங்கள் வழங்கப்பட்டன.
- பணி நியமன ஆணை: கருணை அடிப்படையில், 6 நபர்களுக்கு இளநிலை

உதவியாளர், அலுவலக உதவியாளர், கட்டுநர் ஆகிய பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

## கூட்டுறவுக் கீதம் உருவாக்கத்தின் பின்னணி

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தக் கீதம் உருவாக உறுதுணையாக இருந்த கூட்டுறவுத் துறை முதன்மைச் செயலாளர், கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் ஆகியோருக்கும், சிறந்த பாடலைத் தேர்வு செய்த குழுத் தலைவர் தமிழ்க்கடல் தேவகோட்டை இராமநாமன் அவர்களுக்கும், பாடலை எழுதிய திரு. ஆனந்த செல்வன் அவர்களுக்கும், மெட்டமைத்து இசைத்த திரைப்பட இசையமைப்பாளர் திரு. ஸ்ரீகாந்த் தேவா மற்றும் இசைக்குழுவினருக்கும், இதற்காகப் பாடுபட்ட அனைத்து அலுவலர்களுக்கும் தனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில், அரசு முதன்மைச் செயலாளர் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை திரு. சத்தியபிரதா சாகு, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர் க.சொ. இரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்ற, இணைப்பதிவாளர் (நுகர்வோர் கூட்டுறவு) திரு. வெ. முரளிக்கண்ணன் நன்றியுரை வழங்க, விழா இனிதே நிறைவடைந்தது.❑


கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

**சி.2460 கண்டிப்பேடு நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்**

- மக்கள் சேவையில் 71 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- சங்கம் பங்கு மூலதனம் ரூ.62.92 இலட்சம் நிலுவை உள்ளது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

குறைந்த வட்டி நிறைவான சேவை

5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.10.57 கோடி நிலுவை உள்ளது.
- மொத்தக் கடன்கள் ரூ.19.33 கோடி நிலுவை உள்ளது.

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது.

நிரந்தர வைப்பின் பேரில் கடன் வழங்கப்படுகிறது.

திரு.S.K. விஜயகுமாரன்
செயலாளர்

திரு. ஜெ.ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

*கூட்டுறவே! நாட்டுயர்வு!* *சேமிப்பீர்! பயன்பெறுவீர்!*

# செங்கல்பட்டு கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் எண்.375

1,ராஜாஜி தெரு செங்கல்பட்டு

- மக்கள் சேவையில் 115 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 3 கிளைகளுடன் செயல்படும் வங்கி
- வங்கி நடைமுறை மூலதனம் ரூ. 116.56 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படுகிறது.

## குறைந்த வட்டி நிறைவான சேவை

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- அனைத்துக் கிளைகளும் முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புகள் ரூ.110.14 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ. 87.00 கோடி

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.L. கலையரசி B.Com.
பொதுமேலாளர்

திரு.பெ.வேணுகோபால்.. M.Sc., DCA., H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# ஆர்.கே.10. விருதுநகர் மாவட்ட
# மத்திய கூட்டுறவு வங்கி லிட்., விருதுநகர்

# 104/1, மதுரை ரோடு, அஞ்சல் பெட்டி எண் : 8, விருதுநகர்

தொலைபேசி எண்: (04562) 245815

Website : www.vrdccbank.in Email : virudhunagardccb@gmail.com

| வ. எண் | இட்டுவைப்பு காலம் | மூத்த குடிமக்கள் அல்லாத வாடிக்கை யாளர்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டி விகிதம் | மூத்த குடிமக்களுக்கு நிர்ணயம் செய்யப்படும் வட்டிவிகிதம் |
|---|---|---|---|
| 1. | 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 2. | 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 3. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 4. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.60% | 5.60% |
| 5. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 6.50% |
| 6. | ஒரு வருடம் முதல் 3 வருடங்கள் வரை | 7.50% | 8.00% |
| 7. | 3 வருடத்திற்கு மேல் | 7.30% | 7.80% |

- வைப்புகளுக்கு கூடுதல் வட்டி
- NEFT & RTGS வசதி
- ATM மற்றும் POS வசதி
- Mobile Banking வசதி
- INSTA CARD வசதி
- Micro ATM வசதி
- MSME கடன்
- சம்பளக்கடன்
- Bank of Wheels வசதி

- குறைந்த வட்டியில் நகைக்கடன்
- தனி நபர் நகைக்காசுக் கடன்
- வீட்டு வசதி மற்றும் வீடு அடமானக்கடன்
- சிறு வணிகக்கடன்
- மாற்றுத்திறனாளிகள் கடன்
- முதலீட்டுக் கடன்கள்
- சுய உதவிக் குழுக்கடன்கள்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- UPI, IMPS, Phonepay, Gpay, Paytm. Whatsapp pay வசதி

ப்பி.இராஜலட்சுமி
இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

கூட்டுறவே நாட்டுயர்வு!    சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2450 தொரப்பாடி நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ மக்கள் சேவையில் 59 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.20.81 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.15.56 கோடி
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.17.00 கோடி

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள், மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் கடன் அளிக்கப்படுகிறது.

திரு.R.M..தாமோதரன், D.Coop
செயலாளர்

திருமதி. அ.இந்துஜா
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



கூட்டுறவே நாட்டுயர்வு!    சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.3858 வேலூர் மாவட்ட அரசு ஊழியர்கள் கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ அங்கத்தினர்கள் சேவையில் 106 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்க நடைமுறை மூலதனம் ரூ.2596.80 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்குப் 8.25% வட்டி வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை!

- ✦ அங்கத்தினர்களுக்கு ரூ.20,00,000/– வரை குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.
- ✦ முழுமையான கணிணி வசதி செய்யப்பட்டுள்ளது.
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.17.91 கோடி உள்ளது.
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.4583.39 கோடி உள்ளது.

**11% வட்டியில் (90 பைசா) மத்தியக் கால கடன் ரூ.20,00,000/– வரை**

அங்கத்தினர்களுக்கு மத்தியக் காலக் கடனாகக் கடன் மனு அளித்த உடனே குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. சங்கம் தங்களது அங்கத்தினர்களுக்குச் சொந்த நிதியிலிருந்து கடன் வழங்கப்படுகிறது. சங்கமானது 106 வருடங்களாகச் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இச்சங்கம் 100–வது ஆண்டு விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்களுக்கு 14% பங்கு ஈவுத்தொகை ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

திருமதி.T. காமாட்சி
செயலாளர்

திரு. M. சாணக்கியன்
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வாரவிழா

# கூட்டுறவு, அன்றும், இன்றும், என்றும் – தமிழ்நாடு காட்டும் பாதை....!!!

திருநெல்வேலி பாளையங் கோட்டையில் உள்ள நேருஜி கலையரங்கில் 20.11.2025 அன்று நடைபெற்ற 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவின் மாநில அளவிலான நிகழ்ச்சியை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்களும், கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்களும் இணைந்து சிறப்பாக தொடங்கி வைத்தனர்.

**<u>நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட முக்கிய அம்சங்கள்:</u>**

## தமிழ்நாடு கூட்டுறவு துறை – வரலாறு, வளர்ச்சி, சேவையில் முன்னோடி

"தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை இந்தியாவின் முன்னணி மாநில கூட்டுறவு துறையாக திகழ்கிறது" என்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கேஆர். பெரியகருப்பன் அவர்கள் பெருமிதத்துடன் பின்வருனவற்றை தெரிவித்துள்ளார்.

- இந்தியாவின் முதல் கூட்டுறவுச் சங்கம் 1904ல் திருவள்ளூரின் திரூர் கிராமத்தில் துவங்கப்பட்டது.
- 30க்கும் மேற்பட்ட பொதுச் சேவைகளில் கூட்டுறவு துறையின் பங்கு மிக முக்கியமானது.
- 24 மாவட்டங்களில் கூட்டுறவு மேலாண்மைகல்விநிறுவனங்களால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது.



உறுதிமொழி எடுத்துக்கொண்ட நிகழ்வு

- அரசு பொறுப்பேற்ற பின்பு – 17,000க்கும் மேற்பட்ட இளம் பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்பட்ட சாதனை புரிந்துள்ளது.

<u>**விவசாயிகளுக்கான வரலாற்றுச் சாதனைகள்**</u>

- கடன் தள்ளுபடி – தமிழ்நாட்டின் பெருமை எனக் கூறினார்,

| திட்டம் | தள்ளுபடி தொகை |
|---|---|
| விவசாயக் கடன் தள்ளுபடி | ரூ. 12,000 கோடி |
| பொது நகைக்கடன் (5 பவுன் வரை) | ரூ. 4,903.80 கோடி |
| மகளிர் சுயஉதவி குழுக் கடன் | ரூ. 2,119.23 கோடி |

விவசாயிகள், நெசவாளர்கள், பால் உற்பத்தியாளர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் கூட்டுறவு வங்கிகள் தொடர்ச்சியாக கடனுதவி வழங்கி வருவதை அமைச்சர் வலியுறுத்தினார்.

## நியாய விலையில் வணிகம்

- 37,000 நியாயவிலைக் கடைகள் செயல்பாட்டில் உள்ளன.
- உச்ச நீதிமன்றமும், ஒன்றிய அரசும் பாராட்டிய உள்ளன.
- பொதுமக்களுக்கு நேரடி, துல்லியமான, நீடித்த சேவை வழங்கி வருகிறது.



## "தமிழ்நாடு அரசின் கூட்டுறவுத்துறை இந்தியாவின் முன்னணி மாநில கூட்டுறவு துறையாக திகழ்கிறது" – மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கே. ஆர். பெரியகருப்பன் அவர்கள் பெருமிதம்

### விழாவின் முக்கிய நிகழ்வுகள்

- "கூட்டுறவு ஜோதி" தொடர் ஓட்டம் துவக்கப்பட்டது.
- கூட்டுறவு ரதம் & திட்ட விளம்பர பேருந்துகள் கொடியசைத்து தொடங்கப்பட்டது.
- பொருளாதாரத்தில் பின்தங்கிய 6 மகளிர் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மின்சார ஆட்டோ (e–Auto) வழங்கப்பட்டது.
- கூட்டுறவு கொடி ஏற்றும் நிகழ்ச்சி & உறுதிமொழி நிகழ்வுகள் நடத்தப்பட்டது.
- கண்காட்சி அரங்குகள் திறக்கப்பட்டு பொதுமக்கள் பார்வையிட்டனர்.

கூட்டுறவு கீதம் எழுதிய திரு. ஆனந்த செல்வன் அவர்களுக்கு ரூ.50,000 பரிசுத் தொகை மற்றும் பாராட்டு கேடயம் வழங்கப்பட்டது. மேலும் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

### கூட்டுறவு – மக்களின் வாழ்வில் ஓர் அங்கம்

"நாம் கூட்டுறவைக் காப்போம், கூட்டுறவு நம்மைக் காக்கும்".கடன் பெற மட்டும் அல்ல – சேமிப்பையும் கூட்டுறவு வங்கிகளில் பெருக்க வேண்டும். அதுவே தமிழ்நாட்டின் கூட்டுறவை மேலும் உயர்த்தும்"

என்று அமைச்சர் அவர்கள் விழா நிறைவில் உறுதிப்படுத்திப் பேசினார்.

இந்நிகழ்வுகளில் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் திரு.செ. ராபர்ட் புரூஸ் அவர்கள், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.மு.அப்துல் வகாப்




அவர்கள், மாநகராட்சி மேயர் திரு.கோ. ராமகிருஷ்ணன் அவர்கள் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., அவர்கள், கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் (நுகர்வோர் பணிகள்) திரு.மு.வீரப்பன், இ.ஆ.ப., அவர்கள், மாநகராட்சி துணை மேயர் திரு.கே.ஆர். ராஜு அவர்கள், மாவட்ட ஊராட்சி தலைவர் திரு.வி.எஸ்.ஆர்.ஜெகதீஷ் அவர்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர் முனைவர்.க.சொ. இரவிச்சந்திரன், திருநெல்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் திரு. மு.துரை அவர்கள், திருநெல்வேலி இணைப் பதிவாளர் திருப.மு.முருகேசன் உட்பட கூட்டுறவு துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் கூட்டுறவாளர்கள், பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழா, தமிழ்நாட்டின் கூட்டுறவு வலிமையை இந்திய அளவிலே உயர்த்திக் காட்டிய வரலாற்று தருணம் எனப் போற்றக்கூடும்.❑



கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர்! பயன்பெறுவீர்!

## ஜி 2193 தென்மேல்பாக்கம் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.102.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.46,93 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ.60.19 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.S.வாணி, B.Com., D.Coop.,
செயலாளர்

திரு. ஆ.வேலு, B.B.A., H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2529 காட்பாடி நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- மக்கள் சேவையில் 56 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.21.65 கோடி உள்ளது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புகள் ரூ.16.23 கோடி
- மொத்த கடன்கள் ரூ.23.29 கோடி

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.5% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.S.பாபு, D.Coop.,
செயலாளர்

திரு. J. ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## G 3414 காயரம்பேடு நகர கூட்டுறவுக் கடன் சங்கம் லிட்.,

- ✦ மக்கள் சேவையில் 54 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.96.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- ✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 7.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 7.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணிணி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.53.69 கோடி
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.62.01 கோடி

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.ஏ,ஜெயஸ்ரீ, D.Coop.,
செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்



கூட்டுறவே! **இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,** நாட்டுயர்வு!

தபால் பெட்டி எண்.25, 265, E, வண்டிக்கார தெரு. இராமநாதபுரம்-623501.
✆ : 04567-221245 rdccbank@gmail.com www.rdccbankco.in

**தலைமையகம் உட்பட மாவட்டம் முழுவதும் 32 கிளைகளுடன் வாடிக்கையாளர் சேவையில் 104வது ஆண்டில் செயல்பட்டு வருகிறது.**

**இட்டு வைப்புகளுக்கான வட்டி விகிதம்**

| வ. எண். | விபரம் | சாதாரண மக்களுக்கு | மூத்த குடிமக்கள் |
|---|---|---|---|
| 1. | 31 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 5.50% | 5.50% |
| 2. | 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.85% | 5.85% |
| 3. | 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.30% | 6.30% |
| 4. | 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.85% | 6.85% |
| 5. | 1 வருடத்திற்கு | 8.00% | 8.25% |
| 6. | மாற்றுத்திறனாளிகளுக்கு ஒரு வருடத்திற்கு | 8.25% | 8.50% |

நிறுவனங்கள் / கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பெறப்படும் பெரு இட்டு வைப்புகளுக்கு (Bulk Deposit) 1 வருடத்திற்கு ரூ. 5.00 கோடி மற்றும் அதற்கு மேல் 8.50% வட்டி வழங்கப்படுகிறது.

**கடன் வசதிகள்**

❁ குறைந்த வட்டியில் தனி நபர் நகைக்கடன் ❁ மகளிர் சுயஉதவிக்குழுக்கடன் ❁ மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லாக் கடன் ❁ நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய முத்ரா கடன் ❁ ஆதரவற்ற விதவைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் ❁ வீடு கட்டும் மற்றும் வீட்டு அடமானக் கடன் (குறைந்த வட்டியில்) ❁ சிறுவணிகக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்

**வங்கிச் சேவைகள்**

❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ விரைவு பண பரிவர்த்தனை சேவை (NEFT & RTGS) ❁ ATM மற்றும் நடமாடும் ATM வசதி ❁ Mobile Banking ❁ விவசாயிகளுக்கு KCC Rupay Card, POS மற்றும் Micro ATM மூலம் பணம் பட்டுவாடா வசதி ❁ LPG Gas சமையல் எரிவாயு மானியம் பெறும் வசதி ❁ தனிநபர் பாதுகாப்பு பெட்டக வசதி ❁ G Pay, Phone Pay, PayTM, UPI, IMPS, AEPS

**பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீம யோஜனா (PMJBY) காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## ஜி 1686 சிங்கபெருமாள்கோயில் நகர கூட்டுறவு கடன் சங்கம்

- மக்கள் சேவையில் 68 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 1 கிளையுடன் செயல்படும் சங்கம்.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.66.00 கோடி சங்கம் சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.95.64 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ.89.95 கோடி

5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திருமதி.க.செண்பகவள்ளி, B.Com,M.B.A. D.Coop.,
செயலாளர்

திரு.சுரீன் விஜய், H.D.C.M.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

கூட்டுறவே நாட்டுயர்வு! சேமிப்பீர் பயன்பெறுவீர்!

## சி.2565 பொய்கை நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- மக்கள் சேவையில் 55 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சிப் பாதையில் செயல்படுகிறது.
- சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.21.27 கோடி உள்ளது.
- நிரந்தர வைப்பிற்குப் பொது மக்களுக்கு 8.25% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

### குறைந்த வட்டி நிறைவான சேவை

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/- வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.14.40 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ.22.79 கோடி

5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்

அரசுத் திட்டக்கடன்கள், சிறு வணிகக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர்க் கடன்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.25% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.N.செந்தில்குமார்
செயலாளர்

திரு. M. சாணக்கியன்
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

சேமிக்க சிறந்த வங்கி ! 100 ஆண்டு பாரம்பரியமிக்க வங்கி !!

# புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

புதுக்கோட்டை

SINCE 1920

அன்புடையீர் !

புதுக்கோட்டை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் 28 கிளைகளுடன் 104 ஆண்டுகளை கடந்து மக்கள் சேவை புரிந்து வருகிறது.

## எங்களது சிறப்பம்சங்கள்:-

★ மைய வங்கியியல் சேவை ★ UPI சேவை. ★ துரித பணப்பரிமாற்ற சேவை (RTGS/NEFT/IMPS)
★ ATM சேவை (ATM Debit Card / KCC Card) ★ குறுந்தகவல் சேவை (SMS)
★ செல்லிடை வங்கிச் சேவை (Mobile Banking) ★ தனிநபர் பாதுகாப்பு பெட்டக (Locker) வசதி
★ அரசின் அனைத்து மானியங்களும் பெறும் இணையதள வசதி.
★ அடமான நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி

## விரைவு நகைக்கடன் சேவை

கிராம் ஒன்றுக்கு ரூ.5,000/-

➤ ஒரு நபருக்கு 30.00 இலட்சம் வரை மிகக்குறைந்த வட்டி விகிதம்.
➤ மிகக்குறைந்த நகை பரிசீலனை கட்டணம்.
➤ கூட்டு வட்டி கிடையாது.
➤ அனைத்து வேலைநாட்களிலும் நகைக்கடன் வழங்கப்படுகிறது.
➤ தங்க நகைகளுக்கு முழு பாதுகாப்பு மற்றும் காப்பீடு வசதி.



## மிகக்குறைந்த சாதாரண வட்டியில் கடன்பெற

வீட்டு அடமான கடன் அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரை



புதிய வீடு கட்ட குறைந்த வட்டியில் ரூ.75.00 இலட்சம் வரை

எந்தவித மறைமுக கட்டணம் இல்லை... கடன் சலுகை சாதாரண வட்டி.

தவணைக்காலம் 50 வாரங்கள் | சிறு வணிகக் கடன் உயர்ந்தபட்சமாக கடன் தொகை ரூ.1,00,000 வரை | தகுதியுடையவர்கள் : பூ கடை, பழக்கடை, காய்கறி கடை, வெட்டிக்கடை, மளிகைக்கடை, மீன்கடை, துணி வியாபாரம்.

## கடன் சேவைகள்

- நகைக்கடன் • தனிநபர் சிறு வணிகக்கடன்
- சுய உதவிக்குழு கடன் • டாம்கோ கடன்
- டாப்செட்கோ கடன் • மாற்றுத்திறனாளிகள் கடன்
- தனிநபர் சம்பள கடன் • மகளிர் தொழில் முனைவோர் கடன்
- பணிபுரியும் மகளிர் கடன் • பண்ணை சாரா கடன்
- வீடு கட்டும் கடன் • வீட்டு அடமானக் கடன்
- கைம்பெண்கள் (ம) கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- வேளாண் (ம) ஊரக வளர்ச்சிக்காக விவசாயிகளுக்கு 0% வட்டியில் பயிர்க்கடன் மற்றும் குறைந்த வட்டியில் மத்திய கால கடன்கள்.

### நிரந்தர வைப்புக்கு வட்டி விகிதம்

| காலம் | பொது | மூத்த குடிமக்கள் |
|---|---|---|
| 7 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.00% | 4.00% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 4.50% | 4.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.00% | 5.00% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.50% | 7.00% |
| 1 வருடம் முதல் 3 வருடம் வரை | 8.00% | 8.25% |
| 3 வருடத்திற்கு மேல் | 8.00% | 8.25% |

## சிறப்பு திட்டங்கள்

☞ பயிர் காப்பீட்டுத் திட்டம் (PMFBY)
☞ பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டம் (PMSBY)
☞ பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டம் (PMJJBY)

வணிக வங்கிகளுக்கு இணையான டிஜிட்டல் வசதிகள் கொண்ட வங்கி

UPI PAYMENTS

G Pay PhonePe Paytm UPI BHIM

NEFT & RTGS

Mobile Banking → IMPS

MICRO ATM

வங்கியின் சேவைகள் ! உங்கள் கையில் !!

வாடிக்கையாளர்கள் டிஜிட்டல் சேவையை பயன்படுத்தி கொள்ளவும்.

வங்கியில் முதலீடு செய்துள்ள வைப்புகளுக்கு DICGC நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் நேசமிகு துரித சேவையே வங்கியின் நோக்கம்

இன்றே அணுகுவீர்! வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 27 கிளைகள்

## 72ஆவது கூட்டுறவு வார விழாவின் மகத்தான தொடக்கம் காஞ்சிபுரத்தில் சிறப்பான நிகழ்வுகள்!!!





காஞ்சிபுரம் மாவட்டத்தில் 72ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 14.11.2025 முதல் 20.11.2025 வரை சிறப்பாக கொண்டாடப்பட்டது. வார விழாவின் முதல் நாளான 14.11.2025 அன்று, காஞ்சிபுரம் மண்டல இணைப் பதிவாளர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய கூடுதல் பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் முனைவர். க.சொ. ரவிச்சந்திரன், அவர்கள் கலந்து கொண்டு, கூட்டுறவு பயிற்சி பெறும் மாணவர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து, கீழ்கதிர்பூர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை கடன் சங்கத்தில் நடைபெற்ற மகளிருக்கான கோலப்போட்டி மற்றும் 'ஸ்லோ பைக்' போட்டிகளை அவர் துவக்கி வைத்து, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். கூட்டுறவு இயக்கத்தின் பல்வகை திறன்களை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிகள், வாரவிழாவுக்கு சிறப்பை கூட்டின.




தூத்துக்குடி மாவட்டம் சர்வதேச கூட்டுறவு ஆண்டு–2025 முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் விழா நடைபெற்றது. இதில் திரு நா.சு.மணி, தூத்துக்குடி மேலாண்மை பயிற்சி நிலைய முதல்வர் (பொ) அவர்கள், திரு. ஹெ.ஜான்சன் ஜெயக்குமார் சாயர்புரம் போப் கலை கல்லூரி முதல்வர் (பொ) அவர்கள் இந்த விழாவினை துவக்கி வைத்தார்கள். இதனை தொடர்ந்து தூத்துக்குடி துணைப்பதிவாளர் அலுவலக கண்காணிப்பாளர் /கூட்டுறவு சார்பதிவாளர் திருமதி சுப்புலட்சுமி, துணைப்பதிவாளர் அலுவல ஆய்வுக்குழு/ கூட்டுறவு சார்ப்பதிவாளர் திருமதி முத்துமேரி மரக்கன்றுகளை நட்டார்கள். மேலும் கல்லூரி முன்னாள் மாணவர்கள் திரு.SVPS.ஜெயக்குமார், திருமதி ஜெ.பிரேமாதங்கம், சங்க செயலர் திரு.ஸ்ரீதேவ், சாயர்புரம் சங்க செயலர் திருமதி.சகுந்தலாதேவி, மற்றும் சங்க எழுத்தர் திரு.கிருபாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் சுமார் 500 மரக்கன்று நடப்பட்டது.

"திட்டம் மக்கள் திட்டமாக இருக்க வேண்டும். அத்துடன் மக்களின் ஒத்துழைப்பும் வேண்டும்; மக்கள் ஒத்துழைப்பு இல்லாமல் எந்த திட்டமும் வெற்றி பெற முடியாது."

–காமராசர்



TUCAS
Since 1955
துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (வரை) நெ. K.1550
THE TUDIYALUR CO-OPERATIVE AGRICULTURAL SERVICES LTD., No.K.1550
மேட்டுப்பாளையம் ரோடு, துடியலூர், கோயமுத்தூர் – 641 034.
வேளாண் சேவையில் டியூகாஸ் நிறுவனத்தின் தரமான தயாரிப்புகள்
எண்ணெய் எடுக்காத வேப்பம் பவுடர்
நுண்ணூட்டச்சத்து உரங்கள்
TUCAS
ASOKA BRAND
சமச்சீர் உரங்கள்
கோவை விதைகள்
T.N.P. BUILDINGS
பெட்ரோல் பங்க்
நாற்றுப்பண்ணை
வங்கிப்பிரிவு
பூச்சிக்கொல்லி மருந்துகள்
வேளாண் கருவிகள்
அச்சகப் பிரிவு
வேளாண் சேவையில்
70
1955-2025
ஆண்டுகள்
www.tucascbe.com E-mail: tucas.ao@gmail.com
Mobile : 94878 79721, 94899 75870

## சிரிப்பதற்கு மட்டும்....



மனைவி: இன்னைக்கு நைட் சாப்பிட என்ன வேணும்?
கணவன்: பருப்பும் சாதமும்.
மனைவி: நேத்துதானே அதைச் சாப்பிட்டோம்.
கணவன்: அப்படின்னா கத்திரிக்காய் வறுவல்.
மனைவி:உங்கப் பையனுக்குப் பிடிக்காது.
கணவன்: முட்டைப் பொரியல்?
மனைவி: இன்னைக்கு வெள்ளிக்கிழமை.
கணவன்: பூரி?
மனைவி: நைட் எவனும் பூரி சாப்பிட மாட்டான்.
கணவன்: நான் வேணா ஹோட்டல்ல இருந்து பார்சல் வாங்கிட்டு வரவா?
மனைவி: ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டா உடம்புக் கெட்டுப்போகும்.
கணவன்: மோர் குழம்பு?
மனைவி: வீட்ல மோர் இல்ல.
கணவன்: இட்லி சாம்பார்?
மனைவி: நீங்க முன்னாடியே சொல்லி இருக்கணும்.
கணவன்: அப்ப நூடுல்ஸ் பண்ணு. கொஞ்ச நேரத்துல செஞ்சுடலாம்.
மனைவி: சாப்பிட்ட மாதிரியே இருக்காது. பசி எடுக்கும்.
கணவன்:வேற என்னதான் சமைக்கப் போறே?
மனைவி: நீங்க என்ன சொல்றீங்களோ அது.
கணவன்: அம்மா.. தாயே!...எதுவுமே வேணாம் மா....!!!!




அமோக விளைச்சலை அள்ளித்தருமே!
**கிரிப்கோ குருணை யூரியா**

UREA | BIO-FERTILISER | SEED







**கிரீஷக் பாரதி கோவாப்பரேட்டிவ் லிமிடெட்.,**

அறை எண். 1, 2 & 3, ஆயத்த ஆடை வளாகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

KRIBHCO
Cooperative and beyond...



# அசோலா வளர்ப்பு

எஸ்.எம்.சுரேஷ்குமார், ஆ ப.சினிவாச பெருமாள்,
கோ..குமரேசன், சே.சுதாஷா மற்றும் து.நக்கீரன்
நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் மையம். திரூர்

அசோலா (Azolla) தண்ணீரில் மிதக்கக்கூடிய ஃபெர்ன் வகையைச் (fern) சேர்ந்த ஒரு தாவரமாகும். தமிழில் இது 'மூக்குத்திச் செடி' மற்றும் 'கம்மல் செடி' என்றும் அழைக்கப்படுகிறது. இது நெல் பயிருக்குச் சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இது கால்நடை மற்றும் கோழித் தீவனமாகவும் பயன்படுகிறது. இது மிகச் சிறிய இலைகளையும், நுட்பமான வேர்களையும் கொண்டுள்ளது. மேலும், இதன் தண்டு மற்றும் வேர்ப் பகுதி நீரில் மூழ்கி இருக்கும். இந்தத் தாவரம் அதிவேக வளர்ச்சி கொண்டது. ஃபெர்ன் தாவரமான அசோலாவின் வளர்ச்சிக்கு 35–36 டிகிரி செல்சியஸ் என்ற மிதமான வெப்பநிலை தேவைப்படுகிறது.

## அசோலாவில் (Azolla) உள்ள சத்துக்கள் (Nutrients in Azolla)

- தழைச்சத்து (Nitrogen), மணிச்சத்து (Phosphorus), சாம்பல் சத்து (Potassium) என முக்கியமான சத்துக்கள் ஒருங்கே அடங்கிய ஓர் அதிசயத் தாவரமே அசோலா. (The key nutrients like N, P, and K are all contained in this wonder plant.)
- அசோலாவில் 25% முதல் 30% வரை புரதச்சத்து (Protein) உள்ளது.
- 14% முதல் 15% வரை நார்ச்சத்தும் (Fiber) உள்ளது.
- சுமார் 3% கொழுப்புச் சத்து (Fat) உள்ளது.
- 45% முதல் 50% வரை மாவுச்சத்து (Carbohydrates) உள்ளது.
- பல்வேறுபட்ட கால்நடை மற்றும் கோழித் தீவனத்திற்கு அவசியமான அமினோ அமிலங்கள் (Amino Acids) 7% முதல் 10% வரை உள்ளது.
- தாது உப்புக்கள் (Minerals) 10% முதல் 15% வரையும் (கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், மெக்னீசியம்), வைட்டமின்கள் மற்றும் பீட்டாகரோடின் (Beta–Carotene) மற்றும் பல நுண்ணூட்டச்சத்துக்களும் (Micronutrients) இதில் உள்ளன.
- பீட்டாகரோடின் நிறமியானது வைட்டமின் ஏ உருவாவதற்கு மூலப்பொருளாக உள்ளது. இச்சத்து உள்ளமையால் கோழிகளுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி (Immunity) அதிகரிக்கும்.

- பொதுவாக தாவர இலைகளில் மிகுந்து காணப்படும் டானின் (Tannin) என்ற நச்சு அசோலாவில் மிகவும் குறைவாகக் காணப்படுவதால், இது ஒரு சிறந்த கால்நடைத் தீவனமாகத் திகழ்கிறது.

## அசோலா (Azolla) வளர்க்கும் முறை

☛ பாத்தி அமைத்தல்

- நிழல்பாங்கான இடத்தில் 10 அடி நீளம், 3 அடி அகலம், 1 அடி ஆழம் கொண்ட பாத்தி (குளம்) அமைக்கவும்.
- பாத்தியின் அடித்தளத்தில் பாலீத்தீன் காகிதத்தை (தார்பாய்) சீராக விரிக்கவும்.
- பாலீத்தீன் காகிதத்தின் மேல் 2 செ.மீ உயரத்திற்கோ அல்லது சுமார் 30 கிலோ அளவுக்கோ செம்மண் இட்டு சமப்படுத்தவும்.

☛ நீர் மற்றும் ஊட்டச்சத்துக்கள் சேர்ப்பு

- இதன்மேல் 2 செ.மீ உயரத்திற்கோ அல்லது சுமார் 30 குடம் அளவுக்கோ தண்ணீர் ஊற்றவும்.
- பின்பு, 30 கிராம் சூப்பர் பாஸ்பேட் அல்லது இரண்டு கையளவு ராக் பாஸ்பேட் மற்றும் 300 கிராம் அசோலா தாய் வித்து (Starter Culture) இட வேண்டும்.

☛ பராமரிப்பு

- நாள்தோறும் காலை அல்லது மாலை வேளையில் பாத்தியில் உள்ள மண்ணை நன்கு கலக்க வேண்டும். இதனால் மண்ணில் உள்ள சத்துகள் தண்ணீரில் கரைந்து அசோலாவிற்கு எளிதாகக் கிடைக்கும்.

☛ அறுவடை

- சுமார் 15 நாள்களில் ஒரு பாத்தியில் 3 கிலோ முதல் 5 கிலோ அசோலா தாயாராகிவிடும்.
- இதில் இருந்து 800 கிராம் முதல் 1 கிலோ வரை தினசரி அறுவடை செய்யலாம்.
- அசோலாவின் உற்பத்தி கோடைகாலங்களில் சிறிது குறைந்தும், மழைக்காலங்களில் அதிகரித்தும் காணப்படும்.
- இதுபோல் மூன்று அல்லது நான்கு பாத்திகள் அமைத்து தினமும் அசோலாவை அறுவடை செய்யலாம்.

☛ பூச்சி மேலாண்மை

- பூச்சித் தொல்லை வந்தால், 5 மில்லி வேப்பெண்ணெயை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து பாத்தியில் தெளிக்கவும்.

☛ கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்துதல்

- அசோலாவை பச்சையாகவோ அல்லது உலர் தீவனமாகவோ கால்நடை மற்றும்

கோழிகளுக்குப் பயன்படுத்தலாம். இது சத்து நிறைந்த, சுவை மிகுந்த உணவாகும்.

- அசோலாவை பச்சைத் தீவனமாக முதன்முதலாகப் பயன்படுத்தும் பொழுது கால்நடைகள் அவற்றை உண்பதற்குத் தயக்கம் காட்டலாம்.
- ஆகையால், ஆரம்ப கட்டத்தில் அசோலாவை தவிடு, புண்ணாக்கு அல்லது பிற அடர் தீவனத்துடன் கலந்து மாடுகளுக்குத் தீவனமாகப் பழக்கப்படுத்த வேண்டும்.

## அசோலா உற்பத்தியில் கவனிக்கப்பட வேண்டியவை

☛ **ஊட்டச்சத்து மேலாண்மை:**

- 10–15 நாட்களுக்கு ஒரு முறை, 30 கிராம் சூப்பர் பாஸ்பேட் அல்லது ஒரு கையளவு பசுஞ்சாணம் பாத்தியில் சேர்க்க வேண்டும்.

☛ **நீர் மேலாண்மை:**

- 15–20 நாட்களுக்கு ஒரு முறை, பாத்தியில் உள்ள தண்ணீரில் மூன்றில் ஒரு பங்கை வெளியேற்றிவிட்டு, புதிய தண்ணீரை ஊற்ற வேண்டும்.

☛ **மண் மேலாண்மை:**

- மாதம் ஒரு முறை, பாத்தியில் உள்ள மண்ணில் மூன்றில் ஒரு பங்கை வெளியேற்றிவிட்டு, புதிய மண்ணை இட வேண்டும்.

☛ **பாத்தி சுத்திகரிப்பு (Renewing the bed):**

- ஆறு மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறையாவது, அசோலா விதைகளைத் (தாய் வித்து) தவிர்த்து, பாத்தியில் உள்ள அனைத்து இடுபொருட்களையும் (மண் மற்றும் நீர்) முழுவதுமாக வெளியேற்ற வேண்டும். பின்னர், புதியதாக, சரியான அளவில் இடுபொருட்களை இட்டு, முன்புபோல் அசோலா வளர்ப்புக்குத் தயார் செய்ய வேண்டும்.

☛ **அறுவடை:**

- அசோலாவை தினமும் அறுவடை செய்து தொட்டியில் ஏற்படும் இட நெருக்கடியைக் குறைக்க வேண்டும். இல்லையென்றால், அசோலா (Azolla) தன் உற்பத்தியைக் குறைத்துக்கொள்ளும் அல்லது நிறுத்திக்கொள்ளும்.

## அசோலா வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகள்

☛ **தண்ணீர்**

- அசோலா வளரும் பாத்தியில் தண்ணீர் வற்றி, நிலம் வறண்டுவிட்டால், அசோலா உடனடியாக இறந்துவிடும்.

☛ **ஈரப்பதம் (Humdity)**



- காற்றின் ஈரப்பதம் 85% முதல் 90% இருக்கும்போது அசோலா நன்கு வளரும்.
- ஈரப்பதம் 60%ற்குக் குறையும்போது, அசோலா வறண்டு இறந்துவிடுகிறது.

☛ சூரிய ஒளி

- கோடைக் காலங்களில் பகல் நேரங்களில் உள்ள அதிகச் சூரிய ஒளி அசோலாவை பழுப்பு நிறமாக மாற்றி, அதன் வளர்ச்சியைப் பாதிக்கும்.

☛ காற்று

- வேகமாக வீசும் காற்றானது பாத்திகளில் உள்ள அசோலாவை ஒரு பக்கமாகக் கொண்டு சேர்த்துவிடும்.
- இதனால், அசோலா சமமாகப் பரவ முடியாமல், அதன் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

☛ மண்ணின் கார அமிலத் தன்மை (pH)

- அதிக காரத் தன்மையுள்ள (Alkaline) மண்ணில் அசோலாவின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது.
- மண்ணில் உள்ள நுண்ணூட்டச் சத்துக்களுக்கு (Micronutrients) ஏற்பவும் அசோலாவின் வளர்ச்சி மாறுபடுகின்றது.

## நெல் வயலில் அசோலா பயன்பாடு

☛ அசோலாவை மண்ணில் கலந்து மக்கச் செய்யும் பொழுது, அது ஒரு சிறந்த உரமாகப் பயன்படும். மற்ற தாவரங்களுக்கும் உரமாகப் பயன்படுத்தலாம்.

☛ நெல் விளைச்சலில் இயற்கை உரமாகச் செயல்பட்டு மண்ணின் தரத்தை மேம்படுத்துகிறது.

☛ அசோலா, காற்றிலுள்ள நைட்ரஜனை மண்ணில் நிலைநிறுத்தி (பிடித்து வைக்கும்) வைக்கும் வேலையைச் செய்வதால், ரசாயன முறையில் விவசாயம் செய்பவர்களுக்கு 30 சதவிகிதத்துக்கும் மேல் உரச் செலவு குறைகிறது.



- சாதாரணமாக 15 தூர்கள் வெடிக்கும் நிலத்தில், அசோலா பயன்படுத்துவதால் 40 தூர்கள் வரை வெடிக்கும். இதன் காரணமாக வழக்கமான மகசூலைவிட 10% முதல் 20% கூடுதல் மகசூல் கிடைக்கும்.
- நாற்று நடவு செய்த 7–ஆம் நாள், வயலில் அசோலாவை 5 கிலோ அளவு தூவ வேண்டும். (இதற்கு ஒரு குறிப்பிட்ட அளவு கிடையாது, இது ஒரு ஆரம்ப அளவு).
- நெல் பயிர்களுக்கு இடைவெளியில் கிடைக்கும் காற்று மற்றும் சூரிய ஒளியைப் பயன்படுத்திக் கொண்டு அசோலா வேகமாக வளரும்.
- நெல் வயல்களில் இந்த அசோலாவைத் தூவிவிடுவதன் மூலம், பத்து நாட்களில் வயல் முழுவதும் பரவி வளர்ந்துவிடும்.
- நிலத்தில் பச்சைப் போர்வை போர்த்தியது போல, நிலம் முழுவதும் அசோலா படர்ந்துவிடும்.
- 20–ஆம் நாளில் இருந்து ஒரு ஏக்கரில் தினசரி 50 முதல் 100 கிலோ வரை அசோலாவை அறுவடை செய்யலாம்.
- அசோலா, நிலம் முழுவதும் படர்ந்துவிடுவதால், களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- அசோலாவை நெல் வயலில் வளர்க்கும் போது, நீர் ஆவியாவது குறைகிறது

## அசோலா (Azolla) –வின் பயன்கள்

- நெல் வயலில் இரண்டாம் களை எடுக்கும்போது அசோலாவை வயலில் வைத்து மிதித்துவிட்டால் (பூமிக்குள் அமுக்கிவிட்டால்), கூடுதல் மகசூல் கிடைக்கும்.
- 1 கிலோ அசோலா, 1 கிலோ புண்ணாக்கிற்குச் சமம்.
- ஒரு கிலோ அசோலாவை உற்பத்தி செய்ய ஆகும் செலவு 40–60 பைசா மட்டுமே. இதுவே ஒரு கிலோ புண்ணாக்கின் விலை சுமார் 40 ரூபாய் ஆகும்.





- பசும் தீவனப் பற்றாக்குறையை ஈடு செய்ய, புரதச்சத்து மிகுந்த அசோலாவை உற்பத்தி செய்து நிரந்தர மாற்றுத் தீவனமாகப் பயன்படுத்தலாம்.
- அசோலாவை பச்சையாகவோ அல்லது உலர் தீவனமாகவோ கால்நடை மற்றும் கோழிகளுக்குப் பயன்படுத்தலாம்.
- பசுமையான அசோலாவை நாள் ஒன்றுக்கு ஆடு, மாடு மற்றும் பன்றிகளுக்கு $1/2$ கிலோ முதல் 2 கிலோ வரை கொடுக்கலாம்.
- பால் உற்பத்தி 15% முதல் 20% வரை அதிகரிப்பதுடன் பாலின் தரமும் மேம்படுகிறது. பாலின் கொழுப்புச் சத்து (Fat) 10% வரை உயருகிறது.
- கொழுப்புச் சத்து அல்லாத திடப்பொருள்களின் (SNF) அளவு 3% வரை கூடுகிறது.
- புண்ணாக்கு, தவிடு, பருத்திக் கொட்டை போன்ற தீவனங்களின் அளவை பாதியாகக் குறைத்துக் கொடுக்கலாம்.
- மாடுகளின் சினை பிடிப்புத் தன்மை (Conception Rate) மேம்படும்.
- ஆடுகளுக்கு 300 கிராம் முதல் 500 கிராம் வரை அசோலாவைக் கொடுக்கலாம்.
- முயல்கள் அசோலாவை விரும்பி உண்ணும்.
- அசோலாவை உண்ணும் கோழி முட்டையின் எடை, அல்புமின் (Albumin), குளோபுலின் (Globulin) மற்றும் கரோட்டின் (Carotene) அளவு, அடர் தீவனம் மட்டும் இடப்பட்ட கோழி முட்டையின் சத்தைவிட அதிகமாக உள்ளது.
- மீன் வளர்க்கும் குளத்தில் அசோலாவைத் தூவிவிடுவதன் மூலம், தேவையான அளவு உட்கொள்ளும் மீன்கள் குறைந்த காலத்தில் அதிக எடை கொண்டதாகவும் ஆரோக்கியமாகவும் வளரும்.
- அசோலா வளர்க்கும் இடத்தில் கொசுத் தொல்லை இருக்காது.

இவ்வாறாகப் பல்வேறு வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களுக்கு அசோலாவை நாம் பயன்படுத்தலாம்❑

## சி.812 குடியாத்தம் கூட்டுறவு நகர வங்கி லிட்.,

**தரணம்பேட்டை, சந்தப்பேட்டை மற்றும் பேர்ணாம்பட்டு கிளை**
**தொலைபேசி: 04171–220068, 220688, 233088**



# நிரந்தர வைப்பு மற்றும் தொடர் வைப்புகளுக்கு வட்டி விகிதம் 16.02.2025 முதல்

**7.75% வட்டி**

**மூத்த குடிமக்களுக்கு 16.02.2025 முதல் 8.25%**

| வைப்புகளுக்கான கால விவரம் | வட்டி விகிதம் |
|---|---|
| 15 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.00% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 5.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 6.00% |
| 1 ஆண்டு முதல் 2 ஆண்டிற்குள் | 7.50% |
| 2 ஆண்டும் அதற்கு மேலும் | 7.75% |

**தினசரி நகைக்கடன்**
**மாலை 4.00 மணிவரை வழங்கப்படுகிறது**

கூட்டுறவே! நாட்டுயர்வு ! சேமிப்பீர் ! பயன்பெறுவீர்!

# தாம்பரம் கூட்டுறவு நகர வங்கி லிமிடெட் J.J.46

14, வெங்கடேசன் தெரு, மேற்கு தாம்பரம்,
சென்னை–600 045. ☎.22266583

✦ மக்கள் சேவையில் 71 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி 2 கிளைகளுடன் செயல்படும் வங்கி

✦ வங்கி நடைமுறை மூலதனம் ரூ.66 கோடி வங்கி சொந்த நிதியிலேயே செயல்படுகிறது.

✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.00% வட்டியும், மூத்த குடிமக்களுக்கு 8.25% வட்டியும் வழங்கப்படுகிறது.

**குறைந்த வட்டி நிறைவான சேவை**

**5 நிமிடத்தில் நகைக்கடன் வழங்கப்படும்**

- நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் வழங்கப்படுகிறது.
- அனைத்து இட்டு வைப்புகளுக்கும் DICGC மும்பை இன்சூரன்ஸ் வசதி செய்யப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்புப் பெட்டக வசதி உண்டு.
- அனைத்துக் கிளைகளும் முழுமையான கணிணி வசதி
- மொத்த வைப்புக்கள் ரூ.53.98 கோடி
- மொத்தக் கடன்கள் ரூ. 46.99 கோடி

அரசுத் திட்டக்கடன்கள், பண்ணைசாராக் கடன்கள், வீட்டுவசதிக் கடன், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள். மகளிர் சுய உதவிக்குழுக்கடன் மற்றும் சிறு வணிகக்கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 85% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.V.சங்கர் B.Com.
பொதுமேலாளர்

திரு. ச.தசரதன்.,B.Sc.,B.Ed.,
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிட்.,

187, வடக்கு வெளி வீதி, மதுரை - 625 001.

தொலைபேசி எண் : 0452 - 2342051 முதல் 2342054 Fax : 0452 - 2345747

mdccbank@rocketmail.com, Post Box No. : 14

E-mail : mdccbank@rocketmail.com



## மக்கள் சேவையில் 112 ஆண்டுகள்

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளுடன் பொது மக்களின் பேராதரவால் ஒரு நூற்றாண்டைக் கடந்து சீரும் சிறப்புடன் செயல்பட்டு சேவை செய்து வருகின்றது

**வங்கியின் வைப்புத் தொகை : ரூ. 169131.52 இலட்சம்**

**வங்கி வழங்கியுள்ள கடன் தொகை : ரூ. 241767.32 இலட்சம்**

### வாடிக்கையாளர்களின் வைப்புத் தொகைகளுக்கு வங்கி வழங்கும் வட்டி விகிதம்

| | |
|---|---|
| சேமிப்பு கணக்கு (தினசரி நிலுவைக்கு) | 3.00% |
| கால வைப்புகள் | |
| 7 நாட்கள் முதல் 14 நாட்கள் வரை | 3.00% |
| 15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை | 4.50% |
| 46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை | 5.50% |
| 91 நாட்கள் முதல் 180 நாட்கள் வரை | 6.50% |
| 181 நாட்கள் முதல் 364 நாட்கள் வரை | 7.00% |
| 12 மாதங்கள் முதல் அதற்கு மேலும் | 7.50% |

60 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் இட்டு வைக்கும் வைப்புகளுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படுகிறது.

### தலைமை அலுவலகம் மற்றும் வங்கி கிளைகள் மூலம் வழங்கப்படும் கடன்கள்

* தனி நபருக்கு ரூ. 30.00 இலட்சம் வரை மிகக் குறைந்த வட்டியில் நகைக்கடன்
* புதிதாக வீடு கட்டுவதற்கான கடன் மற்றும் வீட்டு அடமானத்தின் பேரில் அடமானக் கடன்
* தொழில் முனைவோருக்கான கடன்
* சிறு வணிகக் கடன் மற்றும் சிறு வணிக கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
* விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்கள்
* மகளிர் சுய உதவிக் குழுக் கடன்
* பணிபுரியும் மகளிருக்கு கடன்
* கிளைகள் மூலம் மத்திய கால முதலீட்டுக் கடன்
* மாற்றுத்திறனாளிகளுக்கான கடன்
* MSME சிறுத் தொழில் உரிமையாளர்கள் / பங்குதாரர் நிறுவனங்கள்/ கம்பெனிகள் மற்றும் கூட்டுக் குழுக்களுக்குக் கடன்

இது போன்ற பலவகையான கடன்கள் வழங்கப்படுகின்றது. மேலும் விபரங்கள் தெரிந்து கொள்ள மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் மற்றும் 45 கிளைகளை தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

**மேலும் வாடிக்கையாளர்களுக்கு**

* குறைந்த வாடகையில் பாதுகாப்பு பெட்டக வசதி
* ATM (தானியங்கி பணம் கொடுக்கும் இயந்திரம்) வசதி
* RTGS & NEFT வசதி உள்ளது.
* அலைபேசி வங்கியியல் சேவை (Mobile Banking Service)
* விரைவில் இணையதள வங்கி சேவை (Net Banking Facility)

**செயல்பாட்டில் உள்ள வங்கியின் புதிய திட்டம்**

சிறுவர் / சிறுமியர்களுக்கான கண்மணி சேமிப்பு திட்டம்.
இத்திட்டத்திற்கு சாதாரண சேமிப்புக்கு வழங்கப்படும் வட்டியைக் காட்டிலும் கூடுதலாக 1% சேர்த்து 4% வட்டி வழங்கப்படும்.

**"இன்றைய சேமிப்பு ! நாளைய பாதுகாப்பு"**

**"கூட்டுறவு வங்கியில் சேமிப்பீர் வாழ்வை வளமாக்குவீர்"**

இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர்

t கூட்டுறவே! நாட்டுயர்வு!

# சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்

செரி ரோடு, சேலம் –630001, தொலைபேசி எண்: 0427–2451761–765
Email : slm_sdccbslm@yahoo.co.in & devtsdccb@gmail.com
Website : www.salemdccbank.com

**தமிழ்நாடு அரசிடம் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறந்த சேவை புரிந்ததற்காக 8 முறை விருது பெற்ற வங்கி**

**அகில இந்திய அளவில் சிறந்த வங்கிக்கான விருது பெற்ற வங்கி இட்டுவைப்புகளுக்கு அதிக வட்டி விகிதம்**

**8.00%***

**ரூ.50.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் இட்டுவைப்பு தொகைக்குச் சிறப்பு வட்டி விகிதம்**

**8.25%***

**வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வரும் கடன்களின் விபரம்**

- நகைக்கடன்
- வீட்டு வசதிக்கடன், வீடு அடமானக் கடன்
- சம்பளக்கடன், பணிபுரியும் மகளிர் கடன்
- ஆடவர் / மகளிர் சிறுவணிகக்கடன்
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- மாற்றுத்திறனாளி கடன், மாற்று பாலினத்தவருக்கான வணிகக் கடன்)
- கைம்பெண் மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கான கடன்
- நுகர்பொருள் கடன், வாகனக் கடன்
- மகளிர் தொழில் முனைவோர் கடன்
- சுய உதவிக்குழு கடன், கூட்டுப்பொறுப்புக் குழுக் கடன்
- வீட்டு மனை (Plot) வாங்குவதற்கானக் கடன், வாங்கிய மனையில் வீடு கட்டக் கடன்
- நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் கலைபொருட்கள் தயாரிக்கும் பணியில் உள்ளவர்களுக்கு கடன் (Folk Artist & Artisans)
- கல்விக்கடன் (Education Loan), உணவுப் பதப்படுத்தும் காரியத்திற்குக் கடன் (PMFME), MSME கடன்
- டாம்கோ கடன், டாப்செட்கோ கடன்
- கலைஞரின் கனவு இல்லம், மறு அடமானக் கடன் (மூத்தகுடிமக்கள்)
- சூரிய ஒளி ஆற்றல் மூலம் மின்உற்பத்திச் சாதனம் நிறுவக் கடன் (Solar Panel)
- RTGS, NEFT மற்றும் Mobile Banking, Gpay, Phoepee, UPI, வசதிகள்

**தங்களது தேவைகளுக்கு அருகில் உள்ள சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் மற்றும் கிளைகளை அணுகவும்**

கூடுதல் பதிவாளர்/மேலாண்மை இயக்குநர்



# இன்று ஒரு தகவல்

## மாறுவது மனம்!

ஒருத்தர் ரொம்பவும் மகிழ்ச்சியா வந்துக்கிட்டிருந்தார்.

"என்ன விஷயம்?" –ன்னு விசாரிச்சேன்.

"நான் தோற்றுப்போயிட்டேன். அதுதான் மனசுக்கு மகிழ்ச்சியா இருக்கு!" –ன்னார்.

எனக்கு வியப்பா இருந்தது!

இந்த உலகத்துலே தோற்றுப் போறவங்க மகிழ்ச்சியா இருக்கறது உண்டா? "எங்கே தோற்றுப் போனிங்க?" –ன்னு கேட்டேன்.

அதுக்கப்புறம் அவரு விவரமாச் சொன்னார்.

"என்னோட ஐந்து வயது குழந்தையோட நான் விளையாடிக்கிட்டிருந்தேன்... அந்த விளையாட்டுலே என் குழந்தை ஜெயிச்சுட்டுது... நான் தோத்துப் போயிட்டேன்!" –னார் ரொம்ப உற்சாகமா! நான் யோசிச்சிப் பார்த்தேன்.

நாம சின்னக் குழந்தையா இருந்தப்போ எந்த விளையாட்டுலே கலந்துக்கிட்டாலும் அதுலே நாம தான் ஜெயிக்கணும்ங்கற ஒரு வெறி நமக்குள்ளே இருக்கும்.

நம்மை எதிர்த்து விளையாடறவர் நல்லவரா, கெட்டவரா பெரியவரா – சின்னவரா –ங்கறதுலாம் முக்கியமில்லே... அவர் தோற்றுப் போகணும். அதுதான் முக்கியம். எதிரியை சந்தோஷப்படுத்த விளையாடுகிற கலை அப்போ நமக்குத் தெரியறதில்லை! வாழ்க்கையிலே ஒரு பக்குவம் வந்த பிறகு வெற்றி பெறணும்–ங்கற மன அழுத்தம் போயிடுது!



போட்டியிலே ஜெயிக்கணும்ங்கறதை விட, குழந்தையை சந்தோஷப்படுத்தணும் –ங்கறது முக்கியமாப்போச்சு. ஜெயிக்கணும்–ங்கற வெறி ஓடிப்போச்சு!

ஒரு குழந்தையா இருந்தப்போ நம்ம வளர்ச்சிக்கு உதவிய வெற்றி, வெறி, பெரியவனா ஆன பிறகு நமக்கு எதிரியா மாறுது... அதைச் சரியான சமயத்துலே உணர்ந்து கொண்டால் போதும்... நாம பிழைச்சுக்கலாம்.

ஒவ்வொரு மனிதனுமே வாழ்வின் அடுத்தக்கட்ட வளர்ச்சியில் அடியெடுத்து வைக்கிற நேரத்தில், தன்னிடமிருந்து ஏதோ ஒரு குணத்தை அல்லது தன்னுடன் இருந்த ஏதோ ஒரு உறவை இழக்கத்தான் வேண்டியிருக்கு! அப்படிங்கறார் உலகப்புகழ் பெற்ற உளவியல் மேதை எம்.ஸ்காட்பெக்.

ஒரு கட்டம் வரைக்கும் உதவியா இருக்கிற குணம் அடுத்த கட்டத்துக்குத் தடையா கூட மாறிவிடலாம் –ங்கறார் அவர்.

இந்தப் பரிமாண மாற்றத்துக்கு உள்ளாகிற ஒவ்வொருவரும் பிரத்யட்சமாக இதை உணர்றாங்க.

ஆனா பலபேர் எப்படின்னா.. பழசைத் துறந்துட்டு புதிய கொள்கைகளை உருவாக்கிக் கொள்ள இஷ்டமில்லாமல் இருந்துடறாங்க. அல்லது அப்படிச் செய்ய முடியாமல் தவிக்கிறாங்க. இதையெல்லாம் மீறி அந்தப் பழசைத் துறந்துட்டா... அதை இழந்ததாலே உண்டாகிற மன அழுத்தம் சில காலத்துக்கு வருத்திக் கொண்டுதான் இருக்கும். வேறே வழி இல்லை. ஆரோக்கியமான ஒரு முன்னேற்றத்துக்காக அந்த மன அழுத்தத்தைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். அப்படிங்கறார் ஸ்காட்பெக்.

பிறந்த நாள் முதல், இதுதான் சரி – என்று கற்பிக்கப்பட்டு வந்த ஒவ்வொரு தத்துவத்தையும் தங்களின் வளர்ச்சிக்குத் தகுந்த மாதிரி மாற்றி அர்த்தப்படுத்திக் கொள்ள முடியாமல்... வாழ்க்கைச் சூழலில் அரைபட்டு தூளாகிறவர்கள்தான் ரொம்பத் தவிக்கிறாங்க.

பெரும்பாலும் மனிதர்களின் நடுத்தர வயதுலே... முப்பதைத் தாண்டுகிற சமயத்தில்தான் இந்த தவிப்பு உண்டாகுது.

இதைத்தான் மேற்கத்திய நாடுகள்லே அடிக்கடி Mid–Life Crisis –ன்னு சொல்றாங்க.

அப்பப்போ பழசையெல்லாம் தொலைச்சுட்டுப் புதுசு புதுசாப் பிறக்கக் கத்துக்கணும்!'

ஒவ்வொரு நிமிடத்தையும் அந்த நிமிடத்துக்கு ஏற்ற சித்தாந்தம் கொண்டவர்களாகச் சந்திப்போம் –ங்கறார் அந்த உளவியல் நிபுணர்.

அப்படிப் பழகிக்கிட்டா வாழ்க்கை இன்பமயம். இல்லேன்னா தவிப்பு மயம்தான்!

பழசைத் தொலைக்க முடியாதவர்கள் எத்தனையோ ரகம் உண்டு.

ஒருத்தர் நண்பர் வீட்டுக்குப் போனார். அவங்க ஏதோ இனிப்புப் பலகாரம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னாங்க.இவர் சாப்பிட்டுப் பார்த்துட்டுச் சொன்னார்.

"சார்... ஆறுமாசத்துக்கு முன்னாடி ஒரு தடவை இங்கே வந்தேன்... அப்போ ஒரு இனிப்பு பலகாரம் கொடுத்தீங்க. அது இதைவிட நல்லா இருந்தது சார்!" – அப்படின்னார்.

"அப்ப செஞ்ச அதே இனிப்புப் பலகாரம் தான் சார் இதுவும்...!" அப்படின்னார் இவர்!❑




**பெரம்பலூர், வேப்பூர் வட்டம் R. 1033 வயலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் மதுரை கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம் மற்றும் பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் இணைந்து சங்க உறுப்பினர்களுக்கு உறுப்பினர் கல்வி திட்டம் 28.11.2025 அன்று நடைபெற்றது. இந்நிகழ்வில், விரிவுரையாளர் முனைவர் வே.அழகுபாண்டியன், வேப்பூர் கள அலுவலர் ஜெ.ராஜதுரை, பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய செயலாட்சியர் த.கௌசிகன், மேலாளர் த.சாமிநாதன், சங்க செயலாளர் சுப்ரமணியன் மற்றும் சங்க உறுப்பினர்கள் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்துக்கொண்டனர்.**

**கூட்டுறவே நாட்டுயர்வு!** **சேமிப்பீர் பயன்பெறுவீர்!**

## சி.2440 சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் லிட்

- ✦ மக்கள் சேவையில் 59 ஆண்டுகள் சிறப்பான வளர்ச்சி பாதையில் செயல்படுகிறது.
- ✦ சங்கம் நடைமுறை மூலதனம் ரூ.1937.36 கோடி உள்ளது.
- ✦ நிரந்தர வைப்பிற்கு பொது மக்களுக்கு 8.25% வட்டியும் மூத்த குடிமக்களுக்கு 8.50% வட்டியும் வழங்கப்படுகிறது.

## குறைந்த வட்டி நிறைவான சேவை!

- ✦ நகைக்கடன் ஒருவருக்கு ரூ.30,00,000/– வரை குறைவான வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.
- ✦ வாடிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பு பெட்டக வசதி உண்டு.
- ✦ முழுமையான கணினி வசதி
- ✦ மொத்த வைப்புக்கள் ரூ.11.04 கோடி உள்ளது.
- ✦ மொத்தக் கடன்கள் ரூ.1929 கோடி உள்ளது.

**5 நிமிடத்தில் கடன் வழங்கப்படும்**

அரசுத் திட்ட கடன்கள் சிறு வணிகக் கடன்கள், பண்ணைசாரா கடன்கள், டாம்கோ கடன், டாப்செட்கோ கடன், மகளிர் தொழில் முனைவோர் கடன்கள், மகளிர் சுயஉதவிக்குழுக் கடன் மற்றும் சிறு வணிகக் கடன் அதிக அளவில் வழங்கப்படுகிறது. நிரந்தர வைப்பின் பேரில் 8.25% கடன் அளிக்கப்படுகிறது.

திரு.G. விஸ்வநாதன்
செயலாளர்

திரு. J. ரகு
கூட்டுறவுச் சார்பதிவாளர்/ செயலாட்சியர்

# வேலூர் மாவட்டம்... சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதுணை!

சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் வேலூர் மாவட்டத்தில், கிராமப்புற விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும், பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் ஒரு வலுவான அமைப்பாகத் திகழ்கிறது.

## சங்கத்தின் தோற்றம் மற்றும் செயல்பாட்டு எல்லை

சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் 18.06.1965 அன்று பதிவு செய்யப்பட்டு, 24.07.1966 முதல் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. சேனூர் வருவாய் கிராமத்துடன் இணைந்து, சேனூர், வஞ்சூர், டி.கே.புரம், ஜாப்ராபேட்டை, திருமணி, விழுந்தாக்கால் ஆகிய கிராமப் பஞ்சாயத்துக்களை தனது செயல்பாட்டு எல்லையாகக் கொண்டு சேவை புரிகிறது.

- அங்கத்தினர்கள்: 31.08.2025 நிலவரப்படி, சங்கத்தில் 2441 அங்கத்தினர்கள் உள்ளனர்.
- பங்குத் தொகை: உறுப்பினர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ.41.85 இலட்சம் ஆகும். இதில் அரசுப் பங்குத் தொகை ரூ.1.05 இலட்சம்.

## முக்கிய நோக்கங்கள் மற்றும் சேவைகள்

சங்கத்தின் முதன்மையான நோக்கம், உறுப்பினர்களுக்கு விவசாய உற்பத்திக்குத் தேவையான குறுகிய காலக் கடன் மற்றும் மத்திய காலக்கடன் வழங்குவதாகும். மேலும், பின்வரும் முக்கியச் சேவைகளையும் சங்கம் வழங்குகிறது:

- விவசாய உள்ளீடுகள்: உரம், விதை, பூச்சி மருந்து ஆகியவற்றை கொள்முதல் செய்து உறுப்பினர்களுக்கு நியாய விலையில் வழங்குதல்.
- பொது விநியோகத் திட்டம்: நியாய விலைக் கடைகள் மூலம் அரசின் வெள்ள நிவாரணத் திட்டத்தையும், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களையும் விநியோகம் செய்தல்.
- கால்நடைப் பராமரிப்புக் கடன் வழங்குதல்.
- கூட்டுறவுக் கொள்கைகளை விளம்பரப்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.




## வலுவான நிதி நிலை

சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம் வலுவான நிதி நிலையில் உள்ளது.

| வைப்புத்தொகை வகை | 2025–2026–ம் ஆண்டு நிலவரம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| நிரந்தர வைப்புக் கணக்கு | 935.14 |
| சேமிப்புக் கணக்கு | 168.81 |
| மொத்தம் | 1103.95 |

உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களிடமிருந்து குறைந்த வட்டியில் சேமிப்புகள் மற்றும் குறித்த கால ஈட்டுவைப்புகளைப் பெற்று, சொந்த நிதியை அதிகரித்து வருகிறது.

## நியாய விலைக் கடைகள் மூலம் சேவை

சங்கத்தின் செயல்பாட்டு எல்லைக்குட்பட்ட கிராமங்களில், பொது விநியோகத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது.

- முழு நேர நியாய விலைக் கடைகள்: சேனூர், வஞ்சூர், டி.கே.புரம், ஜாப்ராபேட்டை, ஒளையாத்தூர், விழுந்தாக்கால், திருமணி, எல்.ஜி.புதூர், காசிக்குட்டை ஆகிய கிராமங்களில் செயல்படுகின்றன.
- பகுதி நேர நியாய விலைக் கடைகள்: கீழ்வடுகன் குட்டை, கம்பத்தம், தலையாரம்பட்டு, வீரகோயில் மேடு, உண்ணாமலை சமுத்திரம்.
- பயனாளிகள்: 8438 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.




## வழங்கப்பட்டுள்ள கடன்களின் விபரம்

இந்தச் சங்கம் அனைத்து வகையான கடன்களையும் தனது உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. இச்சங்கம் கிசான் கிரெடிட் கார்டு (KCC) திட்டத்தின் கீழ் குறுகிய காலக் கடன், விவசாய நகைக்கடன், கொடுவைக் கடன், வைப்புத்தொகை மீதான கடன், மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு மத்திய காலக் கடன், காசுக்கடன், விவசாயிகள் கூட்டுப் பொறுப்பு குழுக்களுக்குக் கடன், நுகர்வோர் கடன் (பொது) என 2024–2025–ம் ஆண்டில் ரூ.1780.42 இலட்சம் கடன் வழங்கியுள்ளது.

இதில், 2024–2025–ஆம் ஆண்டில் ரூ.301 இலட்சம் பயிர்க்கடன்களுக்குக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு,31.03.2025 வரை ரூ.568.42 இலட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைக்கடன் ரூ.529.41 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கத்தின் 31.03.2025 வரை நிலுவைக் கடன் ரூ.1780.42 இலட்சம் ஆகும்.

01.04.2025 முதல் 31.08.2025 வரை உறுப்பினர்களுக்கு ரூ.807.49 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. 31.08.2025–ல் கடன் நிலுவை ரூ.1929.12 இலட்சமாக உயர்ந்துள்ளது. சங்கம், இயற்கை உரங்கள் மற்றும் இரசாயன உரங்களை தனது உறுப்பினர்களுக்கும், உறுப்பினர் அல்லாத இதர விவசாயிகளுக்கும் வழங்கி வருகிறது.

இச்சங்கம் தணிக்கை செய்யப்பட்டு 'அ' வகுப்பில் உள்ளது. தணிக்கை ஆண்டில் 2016–2017 முதல் சங்கம் நிகர லாபத்தில் செயல்பட்டு வருகிறது. மேலும், 2016–2017, 2017–2018, 2018–2019 ஆம் ஆண்டுகள் முதல் உறுப்பினர்களுக்கு 14% பங்கு ஈவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

## வட்டி விகிதங்கள் (விளிம்புத்தொகை உட்பட)

சங்கத்தால் வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| விபரம் | மத்திய வங்கி வட்டி விகிதம் | உறுப்பினர்களுக்கு வட்டி விகிதம் | விளிம்புத் தொகை |
|---|---|---|---|
| பயிர்க்கடன் | 5.20% | 7% | 1.80% |
| மத்திய காலக்கடன் | 9.50% | 12% | 2.50% |
| நகைக் கடன் | 10.50% | 12% | 1.50% |

## சிறப்பான செயல்பாடு மற்றும் இலாபம்

**சங்கம் தணிக்கை செய்யப்பட்டு 'அ' வகுப்பில் உள்ளது.**

- **நிகர இலாபம்: 2016–2017 ஆம் ஆண்டு முதல் சங்கம் தொடர்ச்சியாக நிகர இலாபத்தில் செயல்பட்டு வருகிறது.**
- **பங்கு ஈவுத்தொகை: 2016–2017, 2017–2018, 2018–2019 ஆம் ஆண்டு முதல் உறுப்பினர்களுக்கு 14% பங்கு ஈவுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.**

## பொது சேவை மையம்

பொதுமக்களின் வசதிக்காக, சங்க வளாகத்தில் பொது சேவை மையம் செயல்படுகிறது. இதன் மூலம்:

- இணையதளம் மூலம் நிலப்பட்டா மற்றும் வருவாய்த் துறையினர் வழங்கும் அனைத்துச் சான்றிதழ்களைப் பதிவு செய்து பெறுதல்.
- கணினி மூலம் செய்திகள் அனுப்புதல்.
- ஒளிநகல் (Xerox) எடுத்தல் போன்ற சேவைகள் வழங்கப்படுகின்றன.

சேனூர் நகர கூட்டுறவு கடன் சங்கம், தனது உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நிதிப் பாதுகாப்பையும், வேளாண்மைச் செழிப்பையும் உறுதி செய்யும் வகையில், ஒரு முன்னோடிச் சங்கமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.❑

கூட்டுறவு இதழுக்கு எழுத்தோவியங்களை அனுப்புவோர் அஞ்சல் / மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டும். வெளியிடப்படாத எழுத்தோவியங்களைத் திரும்ப அனுப்ப இயலாது. கூட்டுறவு இதழில் வெளிவரும் கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் மற்றும் துணுக்குகளில் தெரிவிக்கப்படும் கருத்துகள் எழுதுபவரின் கருத்தாகும்.

– ஆசிரியர்

Printed at Central Cooperative Printing Works Limited, 83/95 Anna Salai, Chennai - 600 002 and Published by Tamilnadu Cooperative Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai - 600 010. Editor: Dr.K.C.Ravichandran, Additional Registrar / Managing Director, Tamilnadu Coop. Union from 170, Periyar E.V.R. High Road, Kilpauk, Chennai-600 010.




| | | |
|---|---|---|
| திருச்செங்கோடு | பருத்தி, எள், நிலக்கடலை | செவ்வாய் |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| | மஞ்சள் | சனி |
| கொங்கணாபுரம் | பருத்தி, எள் | சனி |
| | நிலக்கடலை | ஞாயிறு, திங்கள், புதன் |
| மல்லசமுத்திரம் | பருத்தி | புதன் |
| | நிலக்கடலை, மக்காச்சோளம் | திங்கள், வெள்ளி |
| | தேங்காய் பருப்பு | வெள்ளி |
| ஜலகண்டாபுரம் | தேங்காய் பருப்பு | செவ்வாய் |

Date of Publication : First week of Every Month
Registered Newspaper in India No.1103/57

